# நமஸ்காரத்தின் சரியான வழிமுறைகள்

(The correct methods of paying obeisance - Tamil)

## முன்னுரை

தெய்வ தரிசனத்தின்போதும், பெரியவர்களை சந்திக்கும்போதும் நம் கைகள் நம்மையறியாமல் கூப்புகின்றன. நமஸ்காரம் செய்வது என்பது ஹிந்துக்கள் மனதில் ஆழமாகப் பதிந்துள்ள ஒரு ஸாத்வீக ஸன்ஸ்காரம்; ஒப்புயர்வற்ற ஹிந்து கலாச்சாரத்தின் ப்ரதிபலிப்பு. தெய்வீகத் தன்மைகளான பக்தி, ப்ரீதி, மரியாதை மற்றும் தன்னடக்கம் ஆகியவற்றை அழகாக வெளிப்படுத்தும் ஒரு செயலே, நமஸ்காரமாகும்.

இன்று, அறியாமையாலும், மேற்கத்திய மோகத்தாலும் பலர் கைகுலுக்குகின்றனர். எப்பொழுதாவது கைகூப்பினாலும் அது இயந்திரத்தனமாக உள்ளது. நம்பிக்கையின் அடிப்படையில் அது செய்யப்படாததால், அதிலிருந்து கிடைக்கும் பயனும் குறைவே.

ஒவ்வொரு தார்மீக சடங்கையும் நம்பிக்கையோடு கூட, ஆன்மீக சாஸ்திரப்படி செய்வதே பூரண பலனைத் தரும். இந்த கையேட்டில், ஒவ்வொரு விதமான நமஸ்கார முறையோடு கூட அதன் உள்ளார்ந்த சாஸ்திரமும் கொடுக்கப்பட்டுள்ளது.

நமஸ்காரம் செய்யும்போது தவிர்க்க வேண்டிய சில செயல்கள், யாருக்கு நமஸ்காரம் செய்யக்கூடாது போன்ற விஷயங்களும் இதில் அடங்கியுள்ளன.

ஒவ்வொருவரும் இந்த கையேட்டில் கொடுத்துள்ளபடி நமஸ்கார வழிமுறைகளை கடைபிடித்து வருங்கால சந்ததியினருக்கும் எடுத்துச் செல்வாராக என்பதே குரு சரணங்களில் செய்யப்படும் பிரார்த்தனை.

**- தொகுத்தவர்**

## அட்டவணை


1. நமஸ்காரத்தின் மூலமும் அர்த்தமும் 12
2. நமஸ்காரத்தின் பயன்கள் 12
3. தெய்வங்கள் மற்றும் மஹான்களை நமஸ்காரம் செய்யும் வழிமுறைகள் 15
4. பெரியவர்களுக்கும், வயதானவர்களுக்கும் நமஸ்காரம் செய்வதன் சரியான வழிமுறை 42
5. கணவன்-மனைவி சேர்ந்து நமஸ்காரம் செய்வதன் வழிமுறைகள் 46
6. நமஸ்காரம் சம்பந்தமான வேறு சில காரியங்கள் 51
7. நமஸ்காரம் செய்யும்போது என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது? 57
8. யார் யாருக்கு நமஸ்காரம் செய்யக்கூடாது? 70
9. நமஸ்கரிப்பவர்களுக்கு, பெரியவர்களின் ஆசீர்வாதச்செயலும் அதன் ஆன்மீகத் தத்துவமும் 77